**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 110/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW-1 | Village: |
| Name : சுவாதி | Age :35 |
| Father's/Husband's Name : பிரகாஷ் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 24.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 வது எதிரி ஆஜரில் இருந்தார். 2 முதல் 5 எதிரிகண் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 21.12.2019 ந் தேதி புகார் அளிக்க காவல்நிலையம் சென்றோம். அன்றைய தினம் போராட்டம் நடந்து கொண்டிருந்ததால் பின்னர் வருமாறு சொன்னார்கள். நான் தொடர்ந்து காவல்நிலைம்

சென்று கொண்டிருந்தேன். போலீசார் 26.12.2019 ந் தேதி தான் புகார் மனுவினை பெற்றார்கள். அந்த புகார் மனுவிற்கு முன்பாக வேறு ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். 2018 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் எதிரி வேறு திருமணம் செய்து கொள்வதாக தகவல் தெரிந்ததால் அது சம்பந்தமாக கும்பகோணம் மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த புகாரின் பேரில் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்காக நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் மீது மொத்தம் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்தேன் என்றால் 1ம் எதிரி மீது ஜீவானம்சம் வழக்கு 2022 ம் ஆண்டு தாக்கல் செய்தேன்.

2024 ம் ஆண்டு DVC வழக்கு ஒன்று தாக்கல் செய்தேன். இந்த 5 எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. ஜீவானம்ச வழக்கில் மாதம்தோறும் ரூ. 8000/- 1வது எதிரி எனக்கு கொடுக்க வேண்டும் என உத்தரவாகியுள்ளது. அதன்படி 1ம் எதிரி தற்போது வரை தொகை கொடுத்து வருகிறார் என்றால் சரிதான். DVC வழக்கு மதுராந்தகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. 1ம் எதிரி எனக்கு எதிராக 2018 ம் ஆண்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து 2019 ம் ஆண்டு வாபஸ் பெற்றுக் கொண்டார். என்னுடன் சேர்ந்து வாழ்வதாக கூறி வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார். 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ நான் தனியாக மனுவை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1ம் எதிரி தாக்கல் செய்த விவகாரத்து வழக்கிலேயே சேர்ந்து வாழ்வதாக தெரிவித்தேன்.

நான் HMOP 110 /2018 என 1ம் எதிரியுடம் சேர்ந்து வாழ்வதற்காக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பிறகு 2020 ம் ஆண்டு மீண்டும் 1 எதிரி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதன் வழக்கு எண். HMOP 28 /2020 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கு தாக்கல்

செய்த பின்னர் தான் நான் இந்த வழக்கு சம்பந்தமாக புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டே கொடுத்து விட்டேன். இந்த வழக்கு சம்மபந்தமாக உயர்நீதிமன்றத்தில் சமரசம் பேசப்பட்டு அதில் நானும், 1ம் எதிரியும் சேர்ந்து வாழ அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். அப்போது நான் இந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாக நான் சொன்னேனா என்றால் இல்லை.

உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் 1 ம் எதிரி என்னுடன் சேர்ந்து வாழ்ந்தாரா என்றால் சுமார் 6 மாதங்கள் அபுதாபியில் சேர்ந்து வாழ்ந்தோம். அவ்வாறு சேர்ந்து வாழ்ந்தது இந்த வழக்கு புகாருக்கு பின்னர் தான் என்றால் சரிதான். 6 மாதங்களுக்கு பிறகு நானும் 1ம் எதிரியும் அபுதாபியில் இருந்து ஒன்றாக தான் இந்தியாவிற்கு வந்தோம் என்றால் சரிதான். அதன் பிறகும் நான் இந்த வழக்கினை வாபஸ் பெற்று கொள்ள முடியாது என்று சொல்லி விட்டேன் என்றால் ரம்யா என்ற எதிரிக்கு பெண் குழந்தை பிறந்ததால் வழக்கினை வாபஸ் பெற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டேன். 6 மாதம் கழித்து இந்தியாவிற்கு வந்த போது 1ம் எதிரி அவர் வேலை செய்த நிறுவனத்தில் விடுப்பு எடுத்து கொண்டுதான் வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரி மீண்டும் வெளிநாடு செல்லாமல் இருப்பதற்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து லுக்அவுட் நோட்டீஸ் பெற்றேன் என்றால் சரிதான். 1ம் எதிரி வேலை செய்த நிறுவனத்திற்கு நான் மின்னஞ்சல் அனுப்பி அதன் பேரில் 1ம் எதிரியை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள் என்றால் மின்னஞ்சல் அனுப்பினேன். வேலையை விட்டு நீக்கினார்களா என்று எனக்கு தெரியாது.

ஜீவானம்சம் மனுவில் எதிரிகள் என்னை தாக்கியதாக இந்த புகாரில் சொல்லியுள்ள விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த விவரங்கள் எதுவும் ஜீவானம்சம் மனுவில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் மனு

கொடுக்கப்பட்டு ஒரு வாரம் கழித்து புகார் மனுவை பெற்றுக்கொண்ட போது என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன் பிறகு 2024 ம் ஆண்டு மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். எந்த தேதியில் எங்கு வைத்து 1ம் எதிரிக்கும் 4 எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. 2018 ம் ஆண்டு சுவாமிமலையில் திருமணம் நடக்கபோவதாக தகவல் கேள்வி பட்டு முதல் புகாரினை அளித்தேன். 1 ம் எதிரி 4ம் எதிரியை சட்டவிரோதமாக திருமணம் செய்து கொண்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் எதிரியே போன் மூலமாக எனக்கு தகவல் தெரிவித்தார். 1ம் எதிரி தகவல் கூறியதாக புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் எதிரிக்கும் 4 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் திருமணத்தின் போது மாருதி ஸ்விப்ட் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் 2013 ம் ஆண்டு எனக்கு விசா வந்து அபுதாபி கிளம்பிய போது 2, 3 எதிரிகள் போக வேண்டாம் என பிரச்சனை செய்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் 2ம் எதிரி அந்த கால கட்டத்தில் விசிட்டிங் விசாவில் அபுதாபிக்கு வந்து 1 மாத காலம் எங்களுடன் ஒரே அறையில் தங்கி இருந்தார். அப்போது 2 ம் எதிரி பிரச்சனை செய்து சம்பாதிக்கும் பணம் அனைத்தும் வாடக்கைக்கு செல்கிறது என்று கூறி என்னையும் எனது கணவரையும் வீட்டை காலி செய்து விட்டு இந்தியாவிற்கு அழைத்து வந்துவிட்டார் என சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும், இந்தியாவிற்கு வந்த பிறகு எனது கணவர் வீட்டில் 1 மாத காலம் இருந்தேன். அப்போதும் எனது கணவர் 2ம் எதிரியின் பேச்சை கேட்டுக்கொண்டு என்னுடன் பேசாமல் இருந்தார். அதன் பிறகு எனது கணவருக்கு மஞ்சள்காமாலை இருந்ததாக கூறி என்னை மேல்மருவத்தூரில் உள்ள எனது வீட்டில் விட்டுவிட்டு பிறகு அழைத்து செல்வதாக 1 முதல் 3 எதிரிகள் சொன்னார்கள். அதன்பிறகு எனக்கு தகவல் ஏதும் சொல்லாமல் எனது கணவர் அபுதாபிக்கு சென்றுள்ளார் என சொன்னோ என்றால் சொன்னேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.18 15:58:24 +0530